NEW TAMIL

FIRST READER

புதிய தமிழ் முதல் வாசகம்

OFFICE OF THE REGISTRAR OF ...
28 OCT 1914
MADRAS.

BY

V. B. VENKATARAMA SASTRI

Formerly Tamil Pandit, St. Joseph's College, Trichinopoly.

வா. பி. வேங்கடராம சாஸ்திரி

தமிழ்ப் பண்டிதர், ஸேயிண்டு ஜோஸப் காலேஜ், திரிச்சிராப்பள்ளி.

MADRAS:

PUBLISHED BY

R. THIRUMALAI & Co.,

114, Coral Merchant Street.

1914.

[விலை அண

PRINTED BY S. MURTHY & CO.,
THE "KAPALEE" PRESS,
305, THUMBU CHETTY STREET, MADRAS.

171489

1012 / 494 / 9186

முன்னுரை.

இந்தப்புஸ்தகம் தற்காலம் சென்னை வித்தியா விசாரணைத் தலைவர்களால் பிரசுரம் செய்யப்பட்டிருக்கின்ற பாடக்கிரம விளக்கத்தையும் (Scheme of studies) நவீனபோதனு முறைகளையும் முற்றிலும் தழுவி எழுதப்பட் டிருக்கின்றது.

2. சிறுவர்கள் உற்சாகத்தோடு சுலபமாகவும் திருத்தமாகவும் படிக்கப் பழகும்வண்ணம் பாடங்கள் சிறுபதங்களும் எளிய வாக்கியங்களும் உள்ளனவாய்க் கூடுமானவரையில் சந்திகளின்றி அமைக்கப்பட் ட்டிருக்கின்றன.

3. பதினோராவது பாடம் வரையிலுள்ள ஒவ்வொரு பாடமும் வல்லின மெல்லின இ[illegible]யின வெழுத்துக்கள் இரட்டித்து வருதலையாவது இன மெய் யெழுத்துக்கள் சேர்ந்து வருதலையாவது வடமொழி எழுத்துக்களின் கலப்பையாவது இருதிணை ஐம்பால் மூவிடங்களையாவது விளக்குவதோடு, நீதிக்கதை, பொருள் பாடம், முதலியவைகளில் ஒவ்வொன்றை விஷயமாகவைத்துப் படிப்படியாய் உயர்த்தப்பட் டிருக்கின்றது. விஷய சம்பந்த மில்லாத வாக்கியங்களையுடைய பாடம் ஒன்றுவது இந்தப்புஸ்தகத்தில் இருக்கவேமாட்டாது.

4. பரஸ்பர சம்பந்த போதனை (correlation), முறைப்படி படம் பார்த்துப் படித்தல் சம்பாஷணை, கதை சொல்லல், சொற்றொடராக்கம், (Oral Composition) வார்த்தை கட்டுதல் (word building) சித்திரம், கைத்தொழில் முதலிய விஷயங்களைக் கற்பிப்பதற்கு இந்தப்புஸ்தகம் முழுவதும் உபகாரமாகும் என்பதை உறுதியாய் நம்புகிறேன்.

1914. வா. பி. வே,

TB 05/6/D N14

அட்டவணை.

OFFICE OF THE REGISTRAR
26 OCT 1914
MADRAS.

1. Cow ... பசு.
2. Ball Play. ... பந்தாட்டம்.
3. Kannan. ... கண்ணன்.
4. Mill. ... செக்கு.
5. Mohan. ... மோஹன்.
6. Rama and the Moon. ... இராமனும் சந்திரனும்.
7. Limbs. ... அவையவங்கள்.
8. Plantain Tree. ... வாழை மரம்.
9. House. ... வீடு.
10. Picture. ... படம்.
11. Stereoscope ... பூதக்கண்ணாடி.
12. Sepoys. ... சிப்பாய்கள்.
13. Picture Reading. ... படம்பார்த்து வாசித்தல்.
14. Domestic Animals. ... வீட்டு மிருகங்கள்.
15. Shepherdess. ... இடைச்சி.
16. Time. ... காலம்.
17. Sun. ... சூரியன்.
18. Trade. ... வியாபாரம்.
19. Cleanliness. ... சுத்தம்.
20. Lizard. ... பல்லி.
21. *Parrot*. ... கிளி.
22. Sparrow. ... குயில்.
23. Conversation ... சம்பாஷணை.
24. Play. ... விளையாட்டு.
25. Fish. ... மீன் குட்டி.
26. Castor oil seed. ... ஆமணக்கு.

27. The Bee and the fly. ... தேனீயும் குளவியும்.
28. A wise Odda. ... புத்திசாலியான ஒட்டன்.
29. Water. ... தண்ணீர்.
30. A brave lad. ... ஒரு துணிவுள்ள சிறுவன்.
31. *Advice.* ... புத்திமதி.
32. Bee. .. தேனீ.
33. *Rama.* ... இராமன்.
34. Ploughing. ... உழவு.
35. Humility. ... அடக்கம்.
36. *Poetry.* ... உலகநீதி.

OFFICE OF THE REGISTRAR OF
28 OCT 1914
MADRAS

இராஜவாழ்த்துப்பாட்டு.

வாழ்க வாழ்க வாழ்கவே, வாழ்க வாழ்க வாழ்கவே ;
வாழ்க வாழ்க வாழ்கவே, வாழ்க வாழ்க வாழ்கவே ;

சக்கிரவர்த்தி வாழ்கவே, சார்வபௌமன் வாழ்கவே ;
அக்கிரமத்தை அடக்கியாளும் அதிபன் என்றும் வாழ்கவே;

எங்களூந்தாம் ஜார்ஜெனும் இறைவன் என்றும் வாழ்கவே;
மங்களமாய் மேரி ராணி மகிழ்ச்சியோடு வாழ்கவே

ஜனவமைதி யூனியன் ஜாக்கினோ டுயர்கவே ;
தினமும் கல்வி யாளுகை செழித்து நன்குயர்கவே.

டெல்லி நகரில் முடிபுனை தீரன் என்றும் வாழ்கவே ;
அல்லும் பகலுமாகவே அவர் குடும்பம் வாழ்கவே.

புதிய தமிழ் வாசகம்.

OFFICE OF THE REGISTRAR O
28 OCT 1914
MADRAS.



1. பசு

1.	இது	பசு	மாடு.
2.	பால்	வெகு	ருசி.
3.	கால்	படி	கொடு.
4.	எடு	ஒரு	அணா.
5.	இதோ	பார்	அணா.
6.	மேல்	நுரை	வழி.
7.	படி	நேர்	பிடி.
8.	நிறை	படி	பார்.
9.	சரி	போய்	வா.



2. பந்து ஆட்டம்.

1.	இவன்	பெயர்	கந்தன்.
2.	கந்தன்	மிகவும்	மந்தன்.
3.	காமன்	இவன்	தந்தை.
4.	கையில்	தந்தான்	பந்தை.
5.	எங்கு	வந்து	நின்றான்?
6.	இங்கு	ஆட	வந்தான்.
7.	கண்டு	வந்தான்	கம்பன்.
8.	சண்டை	போடும்	வம்பன்.
9.	பந்து	வேண்டும்	என்றான்.
10.	தந்து	அஞ்சி	நின்றான்.

OFFICE OF THE REGISTRAR OF ... 26 OCT 1914 ...RAS.

3. கண்ணன்.

1. இவன் பெயர் கண்ணன்.
2. கண்ணன் தங்கை அன்னம்.
3. அழகில் [1] மஞ்ஞை ஆவாள்.
4. அன்னம் கையில் கிண்ணம்.
5. கிண்ணம் நிறைய வெண்ணெய்.
6. அண்ணன் கண்ணால் கண்டான்.
7. உண்ண எண்ணம் கொண்டான்.
8. சும்மா விம்மி அழுதான்.
9. அம்மா வெண்ணெய் தந்தாள்.
10. தின்றான் கண்ணன் வந்தான்.

---

1. மயில்.



4. செக்கு.

1. எள்ளை அளந்து செக்கில் கொட்டு.
2. மாட்டை அதட்டித் தட்டி ஓட்டு.
3. வெல்லம் கொஞ்சம் உள்ளே தள்ளு.
4. பச்சைத் தண்ணீர் விட்டுக் கொள்ளு.
5. சுத்த எண்ணெயை மொண்டு கொள்ளு.
6. செக்கில் எண்ணெய் ஒட்டி யிருக்கும்.
7. கற்றை இறகால் ஒற்றிக் கொள்ளு.
8. அப்பம் செய்ய எண்ணெய் உதவும்.
9. பூனை அப்பம் கவ்வி 1 வெளவும்.
10. நெய்யிலும் அப்பம் செய்வது வழக்கம்.

---

1. அபகரிக்கும்.

5. மோஹறன்.

1. மோஹறன் என்னும் பையயன் இவன்.
2. சோம்பலாய் இருக்க லஜ்ஜைப் படுவான்.
3. ஜீவ ஜந்துக்களைப் போஷணை செய்வான்.
4. கையில் இருக்கும் வஸ்து புஸ்தகம்.
5. கஷ்டப்பட்டு நன்றாய்ப் படிப்பான்.

6. ஷண்முக தேசிகர் வாத்தியார் ஆகும்.
7. வருஷப் பரிக்ஷை நடந்த மாஸம்.
8. மோஹன் பரிக்ஷையில் முதலில் தேறினான்.
9. ஹாரம் ஒன்று வெகுமதி கிடைத்தது.
10. தாய்க்கு இவன்மேல் பக்ஷம் அதிகம்.
11. இவனும் தாயிடம் பக்ஷமாய் இருப்பான்.

6. இராமனும் சந்திரனும்.

1. இதோ ஒரு பையன் இருக்கிறான் பார்.
2. இவனை இராமன் என்று அழைப்பார்கள்.
3. ஒருநாள் இரவில் வெளியே வந்தான்.

4. வானத்தில் அழகான சந்திரன் தெரிந்தது.
5. பால்போல் நிலாவும் பகல்போல் காய்ந்த [து.
6. நிலாவைக் கையால் பிடிக்க நினைத்தான்.
7. எட்டி எட்டியும் குதித்து முயன்றான்.
8. சந்திரன் கைக்கு எப்படி எட்டும்?
9. அம்மாவை அழைத்து நிலாவைக் காட்டி [னான்.
10. எட்டாது என்று அம்மா சொன்னாள்.
11. விம்மி விம்மி அழத் தொடங்கினான்.
12. விளையாடும் பொம்மைகள் அம்மா கொடுத் [தாள்.
13. அவைகளை எல்லாம் எறிந்து விட்டான்.
14. ஓவென்று அழுது கூச்சல் போட்டான்.
15. வெளியே யிருந்து அப்பா வந்தார்.
16. இராமன் அழுகையை நிறுத்த நோக்கினார்.
17. உபாயம் ஒன்றை உடனே செய்தார்.
18. இராமன் கையில் கண்ணாடி கொடுத்தார்.
19. அதிலே சந்திரன் உருவம் தெரிந்தது.
20. சந்திரனைக் கண்டான் சந்தோஷம் [கொண்டான்.

7. அவயவங்கள்.



பார்க்கும்.

இல்லாதவன் குருடன்.

கேட்கும்.

இல்லாதவன் செவிடன்.

எடுக்கும்.

இல்லாதவன் மொண்டி.

நடக்கும்.

இல்லாதவன் முடவன்.

பேசும்.

இல்லாதவன் ஊமை.

முகரும்.

இல்லாதவன் மூக்கறையன்.

8. வாழைமரம்.

1. இது ஒரு வாழை மரம்.
2. வாழையிலை பச்சை நிறம்.
3. வாழைப்பூ ஊதா நிறம்.
4. இதழின் உள்பக்கம் சிவப்பு நிறம்.
5. வாழைத்தண்டு வெண்மை நிறம்.
6. வாழைப்பழம் மஞ்சள் நிறம்.
7. பூவைச் சுட்டால் கறுப்பு நிறம்.

9. வீடு.

1. படத்தில் தெரிவது ஒரு வீடு.
2. தெருவில் ஒரு சிறிய கிணறு இருக்கிறது.
3. இந்த உருவம் வட்ட வடிவம் ஆனது.
4. பந்தின் உருவத்தை உருண்டை வடிவம் என்பார்கள்.
5. திண்ணையின் மேல்புறம் நீண்ட சதுர உருவம்.
6. நான்கு ஓரங்கள் திண்ணைக்கு ஒழுங்காய் இருக்கும்.

7. இரண்டு நீளமும் இரண்டு குட்டையும் ஆனவை.
8. நீண்ட ஓரங்கள் இரண்டும் சமமாய் இருக்கும்.
9. குட்டை ஓரங்களும் ஒரே அளவானவை.
10. சதுரம் என்பது எல்லா ஓரங்களும் சமமாய் இருக்கும்.
11. திண்ணையில் ஒரு பெரிய பெட்டி இருக்கிறது.
12. பெட்டிக்கு மொத்தம் ஆறு பக்கங்கள் இருக்கின்றன.
13. பக்கங்கள் எல்லாம் நீண்டசதுர உருவம்.
14. எட்டு மூலைகளும் பன்னிரண்டு ஓரங்களும் இருக்கும்.
15. சுவரில் இரண்டு மாடங்கள் தெரிகின்றன பார்.
16. மாடங்கள் இரண்டும் முக்கோண வடிவமாய் இருக்கின்றன.
17. முக்கோண வடிவத்துக்கு மூன்று ஓரங்கள் உண்டு.

10. படம்.

1. நான் இந்தப் படம் எழுதினேன்.
2. நாங்கள் கேள்விப் பட்டு வந்தோம்.
3. நீ நன்ருய் எழுதி யிருக்கிருய்.
4. நீங்கள் இதனை விலைக்குக் கொள்ளுங்கள்.
5. இராமன் தனக்கு வாங்க நினைத்தான்.
6. சீதை பணத்தை எடுத்துக் கொடுத்தாள்.
7. பெரியோர்கள் அதிகவிலை என்ருர்கள்.
8. படம் அதனுல் தங்கியிருக்கிறது.
9. வர்ணங்கள் வாங்க வேண்டியிருக்கின்றன.

11. பூதக்கண்ணாடி.

இராமன் :—

"என்ன விநோதம்பார்! இந்த விநோதம்பார்!

1. பம்பாய் பட்டணம்பார்! பணிக்கையான பந்தலைப்பார்! கும்பலான ஜனங்களைப்பார்! கூடியிருக்கும் விந்தையைப்பார்! (என்ன)"

கேசவன் :—

"காலணாவுக்கு எத்தனை படம்?"

இராமன் :—“ நாலுபடம்.”

கேசவன் :—“ காட்டு பார்ப்போம் !”

இராமன் :—

2. “ காசிப்பட்டணம் பார்! கங்கைநதி ஓட்டம் பார்! நேசமான மனிதரைப்பார்! நித்தம் முழுகிக் குளிப்பதைப்பார். (என்ன)

3. டில்லிப் பட்டணம்பார்! தர்ப்பாரின் மண்டபம் பார்! எத்தனை ராஜர், எத்தனை துரைகள்; ஏற்றமான வரிசையைப்பார்! எங்கும் குதிரைச் சிப்பாய்கள்பார்! (என்ன)

4. ராஜா ராணியைப்பார்! ராங்கியான உடுப்புகள் பார்! ரோஜாப்பூ மாலைபார்! ரம்மியமான மேடையைப்பார்! (என்ன)

5. எட்டுக்குதிரை வண்டி பார்! ஏறிப்போகும் நேர்த்தியைப்பார்! சட்டமான வாத்தியம்பார்! சலாம் செய்து நிற்பதைப்பார் ! (என்ன)”

12. சிப்பாய்கள்.

1. இதோ பார்! சிப்பாய்கள்!! தெருவில் வரிசை வரிசையாய் வருகிறார்கள். கால் அடி வைப்பதைப்பார். டாக்! டாக்!! டாக்!!!

2. தலை நிமிர்ந்தும் முதுகு நேராகவும் இருப்பதைப்பார். குதிரைமேல் இருப்பவன் தலைவன்.

அவன் நில் என்றவுடன் எல்லோரும் நிற்கிறார்கள்.

3. பார்த்தாயா வலது பக்கம்? துரிதநடை. எல்லோரும் வலப்பக்கம் திரும்பி வேகமாக நடக்கிறார்கள். என்ன அழகான நடை. ஒரே மாதிரியான உடுப்பு.

4. நாமும் விளையாடும்போது இப்படி நடக்கவேண்டும். இதே மாதிரி நம் உபாத்தியாயர் சொன்னவுடன் செய்ய வேண்டும். என்ன அளவான நடை. எல்லோரும் ஒரே கால். டாக்! டாக்!! டாக்!!!

13. படம் பார்த்து வாசித்தல்.



1. மேலே யிருக்கும் படத்தைப்பார்: ஒரு பையனும் ஒரு பெண்ணும் காணப்படுகிறார்கள். அவர்கள் வெளியே உலாவப் போகிறார்கள். அவர்களுடைய வீடு தூரத்தில் இருக்கிறது.

2. அதோ ஒரு நாயை மனிதர்கள் துரத்திக்-கொண்டு ஓடிவருகிறார்கள். அந்தப் பெண் தன் அண்ணன் கையைப் பிடித்துக்கொண்டு இருக்கிறாள். "அண்ணா அதோபார்! ஒரு வெறிநாய் ஓடிவருகிறது" என்று தங்கை சொல்கிறாள்.

3. இந்தப் படத்தில் நாய் மிகவும் கிட்ட வந்து விட்டது. பையன் தன் சட்டையைக்-கழற்றுகிறான். அவன் தங்கை பயப்படுகிறாள். அவன் "பயப்படாதே" என்று முன்னால் நிற்கிறான்.

4. படத்தைப் பார்! சிறுவன் சட்டையை முன் கையில் சுற்றுகிறான். அவன் தங்கை மிக-வும் பயப்படுகிறாள். முழங்காலிட்டு உட்காரு-கிறாள். நாய் பையன்மேல் பாய்கிறது. நாய்க்கு எதிரில் பையன் கையை நீட்டுகிறான். ஜனங்-கள் தடியோடு நெருங்கி வந்து விட்டார்கள்.

5. இந்தப் படத்தில் பையன் கையை நாய் கடிக்கிறது. ஆனால் பையனுக்குக் காயம் இல்லை. துணியைத்தான் கடித்தது. அதன் பற்-கள் துணியில் புதைந்து விட்டன. உடனே ஒருவன் நாயைக் கொல்லத் தடியை ஓங்குகி-றான்.

6. இந்தப் படத்தைப்பார்! நாய் செத்துக்-கிடக்கிறது. அந்தப் பெண் தன் தாயாரைக்-

கண்டு "அம்மா! நான் நடுங்கிப் போனேன். அண்ணன் கொஞ்சமும் பயப்படவில்லை; நாயை எதிர்த்து என்னைக் காப்பாற்றினான்" என்று சொல்கிறாள். தாய் மிகவும் சந்தோஷப்-படுகிறாள்.

14. வீட்டு மிருகங்கள்.

1. ஒருவன் நாய், பூனை, பசு, இரண்டு கோழி இவைகளை வளர்த்து வந்தான். நாய்க்கு நீலி என்று பெயர்.

2. ஒரு நாள் நீலி எதிரில் இருந்த பூனையைப் பார்த்து "உன்னால் என்ன உபயோகம்; நீ ஒன்றுக்கும் உதவாதவன்" என்று 'வள் வள்' என்று குரைத்தது. பூனை "ஞாவ் ஞாவ் என்னலா? உன் காவல் எல்லாம் அந்தச் சிறு குடிசை மட்டும் தானே" என்றது.

3. நாய் "பாலைக் குடிப்பதும் பகலெல்லாம் தூங்குவதும்தானே உன் வேலை. நானே இந்தத்தோட்டத்துக்குக் காவல். கோழிகளையும் வாத்துக்களையும் திருடவரும் நரிகளுக்கு என்னைக் கண்டால் நடுக்கம். நேற்று இரவு இங்கே திருடவந்த துஷ்டன் என்னைப் பார்த்தான். உடனே எடுத்தான் ஓட்டம். தெரியுமா?" என்றது.

4. பக்கத்தில் இருந்த பெட்டைக்கோழி "பாருங்கள்; என்ன அழகான முட்டைகள். இதோ இருக்கும் குஞ்சுகளை நாளைச் சந்தையில் விற்றால் என்ன விலைக்குப் போகும். என்றால் யஜமானருக்கு எவ்வளவு லாபம் உண்டாகின்றது. பாருங்கள்; கொக் கொக் கோ" என்று கூவிற்று.

5. பசு இவற்றை யெல்லாம் கேட்டு "நாம் எல்லோரும் உபயோகம் உள்ளவர்கள் தாம். நீலி வீட்டைக் காக்கிறது. பூனை எலியைப் பிடிக்கிறது. கோழி முட்டை இடுகிறது. நானும் பால் கொடுக்கிறேன்" என்று நிதானமாய்ச் சொல்லிற்று.

6. வீட்டுக்காரி அங்கு வந்து பசுவுக்குப்-புல்லையும், நாய்க்கு மாமிசத்தையும், பூனைக்குப் பாலையும், கோழிக்குத் தானியத்தையும் வைத்-தாள். எல்லாம் அவளுக்கு ஒன்றே அல்லவா?

15. இடைச்சி.

1. இந்தப் பெண் என்ன செய்கிறாள்? தயிர் கடைகிறாள். எதிரில் வைத்திருக்கும் பானை-யில் தயிர் இருக்கிறது. பானைக்குக் கீழே யிருப்-பது புரிமணை. இது வைக்கோலால் ஆக்கப்ப-ட்டது. பானைக்குள் சுழன்றுகொண்டிருப்பது மத்து. மத்துக் காம்பில் ஒரு மெல்லிய கயிறு

சுற்றி அதன் இரண்டு முனைகளையும் மாற்றி மாற்றி இழுப்பதனால் மத்து சுழலுகிறது.

2. பாலைக் காய்ச்சி ஆறினபின்பு அதில் கொஞ்சம் பழைய மோர் விட்டு மூடி வைப்பார்கள். அது மேலே எடு படிந்து தயிராய் விடும். அந்த எடுதான் வெண்ணை. எட்டோடு கலந்திருக்கும் வெண்ணை கடைவதனால் வேறுகப் பிரிந்து மேலே மிதக்கும். அப்பொழுது வெண்ணையைத் திரட்டி எடுத்துக்கொள்ளலாம். வெண்ணையை உருக்கினால் நெய் ஆகும். கடைந்த தயிருக்கு மோர் என்று பெயர்.

3. தயிரையாவது மோரையாவது சில நாள் வைத்திருந்தால் புளித்துக் கெட்டுப்போகும். ஆதலால் அவைகளை அப்போதைக் கப்போதே உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டும்.

4. நெய் மாத்திரம் கொஞ்ச நாள் வரையில் கெடாது. வாசனையோடிருக்கும். புதிதாய் உருக்கிய நெய்க்குப் 'புத்துருக்கு நெய்' என்று பெயர். அது அதிக வாசனையும் ருசியும் உள்ளதா யிருக்கும். பருப்பும் நெய்யும் கலந்த அன்னம் உடம்புக்கு நல்ல பலம் தரும்.

16. காலம்.

1. பகலில் சூரியன் பிரகாசிக்கிறது. அதன் உதவியினால் வேலைசெய்கிறோம். இரவில் சூரியன்

மறைந்து விடுகின்றது. ஆகையினால் இருட்டாயிருக்கும். நாம் வெளியே போவது கஷ்டம். அப்பொழுது தூங்கி இளைப்பாறுகிறோம்.

2. ஒருபகலும் ஒரு இரவும் சேர்ந்தது ஒரு நாள். ஒவ்வொரு நாளுக்கும் பெயர் உண்டு. அவை ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழம், வெள்ளி, சனி. இந்த ஏழு நாள்களும் சேர்ந்தது ஒரு வாரம். சனிக்கிழமைக்குப் பிறகு மறுபடி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பிக்கிறது. ஒவ்வொரு வாரத்திற்கும் முதல் நாள் ஞாயிற்றுக்கிழமை. கடைசி நாள் சனிக்கிழமை.

3. முப்பது நாள் ஒரு மாதம். பன்னிரண்டு மாதம் கொண்டது ஒரு வருஷம்.

தமிழ் மாதங்கள்.	இங்கிலீஷ் மாதங்கள்.
1. சித்திரை	1. ஜனுவரி
2. வைகாசி	2. பிப்ரவரி
3. ஆனி	3. மார்ச்சு
4. ஆடி	4. எப்ரல்
5. ஆவணி	5. மே
6. புரட்டாசி	6. சூன்
7. ஐப்பிசி	7. சூலை
8. கார்த்திகை	8. ஆகஸ்டு
9. மார்கழி	9. செப்டம்பர்
10. தை	10. அக்டோபர்
11. மாசி	11. நவம்பர்
12. பங்குனி.	12. டிசம்பர்.

4. தமிழ் வருஷத்துக்கு முதல்மாதம் சித்திரை. கடைசிமாதம் பங்குனி. பங்குனிமாதம் முடிந்ததும் புதுவருஷம் ஆரம்பம் ஆகும். இங்கிலீஷ் வருஷத்துக்கு முதல்மாதம் ஜனுவரி. கடைசி மாதம் டிசம்பர்.



17. சூரியன்.

1. "நான் யார்? என் பெயர் என்ன? நான் அதிகாலையில் எழுந்திருந்தேன். ஜன்னல் வழியாய் உங்களைப் பார்த்தேன். நீங்கள் தூங்கிக்கொண்டு இருந்தீர்கள். உங்களை எழுப்பினேன். நீங்கள் எழுந்திருக்கவில்லை. எனக்கு ஒழிவே கிடையாது. எல்லாவற்றிற்கும் மேலே ஆகாயத்தில் உலாவுகிறேன். என் தெரியுமா? உங்களுக்கு வெளிச்சத்தையும் உஷ்ணத்தையும்

தருவதற்காக. ஆனால் நான் உங்கள் கிட்ட வரக்கூடாது. வந்தால் எல்லாரும் வெந்துபோய் விடுவீர்கள்.

2. நான் காலையில் புறப்படும்போது என்னைக் கண்டு சந்தோஷத்தால் கோழிகள் கூவும். காக்கைகள் 'கா! கா!! கா!!!' என்று கத்தும்.

தாமரைப்பூ மலரும். ஆந்தை, கோட்டான் முதலிய துஷ்டப் பக்ஷிகள் பொந்துகளில் ஒளிந்து கொள்ளும். புலி, நரி முதலிய துஷ்ட மிருகங்கள் புதர்களில் பதுங்கிவிடும்.

3. காலையில் கிழக்கே புறப்படுவேன். பகலில் உச்சிக்கு நேரே ஆகாயத்தில் வருவேன். மாலையில் மேற்கே போய் மறைந்துவிடுவேன். என் ஓட்டத்தைப் பிடிக்க உங்களால் முடியாது. நான் யார்! என் பெயர் என்ன?

18. வியாபாரம்.

1. சிறுவன்:—சாமான்கள்! விளையாட்டுச் சாமான்கள்!! அழகான விளையாட்டுச் சாமான்கள்!! வெகு நயம்!!! வெகு நயம்!!!

2. அம்மா! என்னிடத்தில் யானைகள், குதிரைகள், வண்டிகள், பந்துகள், சாட்டைக்கோல்கள், குடங்கள், பம்பரங்கள் இருக்கின்றன. தாயே! உங்கள் குழந்தை மிகவும் நல்ல பிள்ளை. ஏதாவது விளையாட்டுச் சாமான்கள் வாங்கிக்

கொடுங்கள். அம்மா! இதோ பாருங்கள். இந்த வண்டி எவ்வளவு அழகாயிருக்கிறது. வேண்டியிருக்குமா அம்மா?

3. ஸ்திரீ:—எதோ காட்டு? இது என்னவிலே?

4. சிறுவன்:—இந்தாருங்கள்; இரண்டே அணு தான் அம்மா!

5. ஸ்திரீ:—இதற்கு ஒரு சக்கரம் இல்லையே!

6. சிறுவன்:—அப்படியா! நான் பார்க்கவில்லை தாயே! கிடக்கட்டும்; ஒரு அணு கொடுங்கள். உங்கள் குழந்தைக்கு இந்த யானை பிடிக்குமா? எல்லாக் குழந்தைகளும் யானையே வாங்குகிறார்கள்.

7. ஸ்திரீ:—நல்ல யானையாக ஒன்று எடு? பார்ப்போம்.

8. சிறுவன்:—இந்தாருங்கள் அம்மணி!

9. ஸ்திரீ:—வெகு அழகாய்த்தான் இருக்கிறது. ஆனால் இதற்குத் தும்பிக்கை இல்லையே.

10. சிறுவன்:—ஆம் அம்மா! இதற்குத் தும்பிக்கை ஒடிந்துவிட்டது.

11. ஸ்திரீ:—இருக்கட்டும் என்ன விலை?

12. சிறுவன்:—இது ஆறு அணா! நாலணா வைத்துக்கொள்ளுங்கள்.

13. ஸ்திரீ:—சரி, இந்தா! யானையைக் கொடு?

14. சிறுவன்:—வந்தனம். இன்னும் ஏதாவது வேண்டுமா?

15. ஸ்திரீ:—வேண்டாம்; இன்று இது போதும். இன்னும் எப்போதாவது பார்த்துக்கொள்ளலாம்.

16. சிறுவன்:—வந்தனம்; போய் வருகிறேன் அம்மணீ! நல்ல பம்பரங்கள், வண்டிகள் சரசவிலை! சரசவிலை!!

19. சுத்தம்.

1. முருகன் என்னும் சிறுவன் ஒரு நாளும் பல் துலக்குவதில்லை. ஸ்நானம் செய்வதும் இல்லை. துணி துவைப்பதும் இல்லை. அவனுடைய தா-

யார் அழைத்தாலும் வரமாட்டான். ஓடிப்போய் விடுவான். குளிப்பதென்றால் அவனுக்கு மகா-கஷ்டம். கண்ட இடங்களிலும் மண்ணில் படுத்-துப் புரளுவான்.

2. இப்படி யிருந்ததனால் அவன் வாயிலும் உடம்பிலும் கெட்ட நாற்றம் உண்டாயிற்று. உடம்பெல்லாம் சிரங்கு புறப்பட்டது.

3. ஒரு நாள் முருகன் தன் கூட்டாளியான கந்தனுடன் விளையாடப் போனான். அவனைப் பார்த்துக் கந்தன் தன் மூக்கைப் பிடித்துக்-கொண்டு "அப்பா! என்ன நாற்றம் வீசுகின்றது. முருகா! என் கிட்ட வராதே. உன் பக்கத்தில் இருந்தாலும் எனக்குச் சிரங்கு வந்துவிடும். உன் வாயைத் திறந்தால் ஏன் அவ்வளவு நாற்-றம் வீசுகின்றது. நீ பல் துலக்குவதே இல்லையா? உன் உடம்பைப் பார்த்தால் அதிக விகாரமாய் இருக்கிறது. துணி நாற்றமும் பொறுக்க முடிய-வில்லையே. நான் உன்னுடன் விளையாட வரவே-மாட்டேன்." என்று சொல்லிப் போய்விட்டான்.

4. முருகனுக்கு மிகவும் வெட்கம் உண்டாயிற்-று. வீட்டுக்குத் திரும்பி வந்துவிட்டான். பின்பு தன் தாயாரிடத்தில் கந்தன் சொன்ன சங்கதி களைச் சொன்னான். தன்னைக் குளிப்பாட்டும் படிக்கும் துணியைத் துவைத்துக் கொடுக்கும்-படிக்கும் வேண்டிக்கொண்டான். தாயார் வெகு சந்தோஷம் அடைந்தாள். உடனே அவன்

பல்லை விளக்கி ஸ்நானம் செய்வித்து அழுக்கில்லாத வஸ்திரமும் கொடுத்தாள். அதுமுதல் கந்தன் நாள்தோறும் காலையில் எழுந்ததும் பல் விளக்கி ஸ்நானம் செய்யாமல் வெளியில் புறப்படுவதேயில்லை. சுத்தமான வஸ்திரத்தையே கட்டுவான். அப்புறம் அவனுக்கிருந்த வாய் நாற்றமும் சிரங்கும் பறந்து விட்டன.

20. பல்லி.

1. இதோ பார்! ஒரு பல்லி. இதன்மேல் சிறிய சிறிய கறுப்புப் பொட்டுகள் இருக்கின்றன.

இது கீழே விழாமல் வழவழப்பான சுவர்கள் மேலும் வேகமாய் ஏறியிறங்கும். கால்விரல்களின் அடிப்பக்கத்தில் சதை இருக்கிறது. விரல்களும் அகன்று விலகியிருக்கின்றன. அதனால்தான் அது எந்த இடத்திலும் சுலபமாக ஏறியிறங்குகிறது.

2. ஒருநாள் ஒரு பல்லி வெயிலில் குளிர்காய்ந்துகொண்டிருந்தது. கிட்டு என்னும் சிறுவன் அதைப் பிடிக்கப்போனான். அது ஓட ஆரம்பித்தது. கிட்டுவும் பின்னால் ஓடி அதன் வாலைப் பிடித்துக் கொண்டான். வாலை அறுத்துக்கொண்டு பல்லி ஓடிப்போய் விட்டது.

3. அது தான் பல்லி தப்பித்துக்கொள்ளும் வழி. அறுந்தவால் தரையில் துள்ளித்துள்ளி ஆடிக்கொண்டிருந்தது. அதைப் பார்த்துக் கிட்டு சந்தோஷப் பட்டான்.

4. வாலறுந்த பல்லி சுவரின்மேல் ஏறிக்கொண்டு "கிட்டு கிட்டு" என்று கத்திற்று. அதைக் கேட்டுக் கிட்டு திடுக்கிட்டுத் தன் தாயாரிடம் ஓடி நடந்ததைச் சொன்னான்.

5. தாயார் "கிட்டு! உன் காதை நான் பிடித்து இழுத்தால் உனக்கு எப்படியிருக்கும்? நோகும் அல்லவா; அந்தப் பல்லியின் வாலை அறுத்து விட்டாயே; அதற்கு எவ்வளவு நோவு உண்டாயிருக்கும்? அதனால்தான் அப்படிக் கத்திற்று.

இனி ஒருபோதும் பிராணிகளுக்குத் தொந்தரவு செய்யாதே" என்றாள்.

6. இதைக் கேட்டவுடன் கிட்டு "அம்மா! அதற்கு நோய் உண்டாகும் என்று நான் நினைக்கவேயில்லை. இனி அப்படிச் செய்யமாட்டேன். இந்தத்தடவை மாத்திரம் மன்னித்துவிடுங்கள்" என்று கேட்டுக்கொண்டான். அன்று முதல் கிட்டு எந்த ஜந்துவுக்கும் ஒரு தொந்தரவும் உண்டாக்குவதில்லை.

21. கிளி.

பாட்டு.

எங்களை வளர்க்கவே வேண்டாம்.
இன்பமுடனே (எங்களை)

சங்கதியைச் சொல்லுகிறோம்;
சற் குணச் சிறுவர்களே. (எங்களை)

காட்டில் நாங்கள் வாழ வேண்டியே
கடவுள் படைத்தார்.
கூட்டினில் அடைத்தெங்களைக்
கொல்லுகிறீர் பாவம்! பாவம்!! (எ)

இந்த இரண் டிறகைப் பாருங்கள்;
எப்போதும் உள்ள,
விந்தையாய்ப் பறந்து செல்வோம்
வேடிக்கையுடன் கூடியே. (எங்களை)

நல்ல ருசிக் கனிகளைத் தின்போம்;
நாள்தோறும் தேடி,
கொல்லையில் கொவ்வைப் பழத்தைக்
கூடி யாடித் தின்றிடுவோம். (எங்களை)

சோம்பலாய் இருக்கவே மாட்டோம்;
சுற்றித் திரிவோம்;
கூம்பியே இறகுள்ளது
கூண்டினி லடைந்திருந்தால். (எ)

நண்பர்களை விட்டுப் பிரிந்தோம்;
நாட்டுக்குள் நாங்கள்;
பண்புடைய பிள்ளைகளே!
பாவம் வரும் விட்டிடுங்கள். (எங்களை)

22. குயில்.

இதோ படத்தில் இருப்பது ஒரு குயில். இதன் நிறம் கருமை. மாமரத்தின் சிவந்த இளந்தளிர்கள் தாம் இதற்கு ஆகாரம். குளிர்காலங்களில் இந்தப் பறவை வெளியே புறப்படாது. இது கூடு கட்டுவது கிடையாது. ஒரு வேளை இதற்குக் கட்டத் தெரியாமல் இருக்கலாம். அல்லது ஒரு சோம்பேறிப் பக்ஷியாகவும் இருக்கலாம். முட்டை இட எங்கே போகும்? சொல்லுகிறேன்.

2. ஒரு காகம் தீனிக்காக வெளியே போயிருந்தது. அந்தச் சமயம் பார்த்து ஒரு குயில் அதன் கூட்டிலிருந்த முட்டைகளோடு தன் முட்டைகளையும் இட்டுச் சென்று விட்டது. எல்லா முட்டைகளும் ஒரே மாதிரியாய் இருந்தன. காகத்துக்கு ஒன்றும் பேதம் தெரியவில்லை. மேலும் காக்கைக்கு நம்மைப் போல எண்ணத் தெரியுமா? எல்லாம் தன்னுடைய முட்டைகள் என்றே நினைத்து அடைகாத்தது. பின்பு முட்டைகளிலிருந்து குஞ்சுகள் வெளியில் வந்தன. எல்லாக் குஞ்சுகளுக்கும் அந்தக் காகம் இரை கொடுத்து வளர்த்து வந்தது. அப்போதுகூடக் காக்கைக்குத் தன்குஞ்சு என்றும் வேறு குஞ்சு என்றும் வித்தியாசம் தெரியவில்லை.

3. கொஞ்சம் நாளான பிறகு குஞ்சுகள் கத்த ஆரம்பித்தன. காக்கைக் குஞ்சுகள் 'கா! கா!! கா!!' என்று கத்தின; குயில் குஞ்சுகள் 'கூ! கூ! கூ!' என்று கூவின. அப்பொழுதுதான் காகம் குயில் குஞ்சுகளைத் தன் குஞ்சுகள் அல்லவென்று தெரிந்துகொண்டு துரத்தத் தலைப்பட்டது. குயில் குஞ்சுகள் வளர்ந்து விட்டபடியினால் வேறே இடத்துக்குப் பறந்துபோய் விட்டன. குயிலின் சாமர்த்தியத்தைப் பார்த்தீர்களா?



23. ஒரு சம்பாஷணை.

1. சுப்பன்:—இராமா! ஏது இன்று புதிய வஸ்திரம் மேலே போட்டுக்கொண்டிருக்கிறாய்?

2. இராமன்:—என் தகப்பனார் வாங்கிக் கொடுத்தார்.

3. சுப்பன் :—எங்கு வாங்கினார்? என்ன விலை?

4. இராமன்:—துணி மூட்டையைத் தெருவில் கொண்டுவந்த ஒரு கைக்கோளனிடத்தில் வாங்கினார்; இதன் விலை அணா ஆறு; முழம் நான்கு.

5. சுப்பன் :—இப்படி எடு! நான் முழம் போட்டுப் பார்க்கிறேன்.

6. இராமன் :—இந்தா ஒரு தலைப்பைப் பிடித்-துக்கொள்.

7. சுப்பன்:—இழுத்துப் பிடி; ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு; இராமா! கைக்கோளனை உன் தகப்பனார் ஏமாற்றிவிட்டார். இது ஆறுமுழம் இருக்கிறதே!

8. இராமன் :—ஒரு நாளும் அவர் அப்படிச் செய்யமாட்டார். இரு; நான் முழம் போடு-கிறேன். ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஐந்தரை; இது என்ன வேடிக்கை ; என் தகப்பனார் அளந்தது நாலு முழம் ; நீ அளந்-தது ஆறு முழம்; நான் அளந்தது ஐந்தரை முழம்.

9. சுப்பன் ;—ஆம் இராமா ! உன் தகப்பனார் கைம்முழம் நம்மிருவருடைய முழத்தைக் காட்-டிலும் பெரிதாயிருக்குமல்லவா ; அதனால் நாலு-முழம் இருக்கலாம்.

10. இராமன் :—தெரிந்துவிட்டது; இனி நம் கையால் அளந்து வஸ்திரம் வாங்கக்கூடாது; அப்படி வாங்கினால் நமக்குத்தான் நஷ்டம்.

11. சுப்பன் :—ஜவுளிக்கடையில் கடைக்காரன் துணியைக் கையால் அளப்பதில்லை; ஒரு நீண்ட இரும்புத் தகட்டால் அளக்கிறான்; அந்த அள-வால் வாங்கினால் வித்தியாசம் இருக்கமாட்-டாது.

12. இராமன் :—ஆம்; நானும் பார்த்திருக்கிறேன். அந்தக் கோல் எவ்வளவு நீளம்?

13. சுப்பன் :—அரை கஜ நீளம் என்று என் மாமா சொன்னார்.

14. இராமன்:—ஆனால், அதைப் போல் இரண்டு பங்கு நீளம் கொண்டது தானே ஒரு கஜம்; எல்லா ஜவுளிக் கடைகளிலும் இந்தக் கோல் இருக்கிறது.

15. சுப்பன் :—அந்தக் கோலின் இரண்டு முனைகளிலும் முத்திரை போட்டிருப்பதைப் பார்த்தாயா?

16. இராமன் :—ஆம்; பார்த்திருக்கிறேன்; முத்திரை போட்டது யார்? ஏன் போட்டார்கள்?

17. சுப்பன் :—நான் என் மாமாவைக் கேட்டேன்; அந்த முத்திரை கச்சேரியில் போட்டதாம்; இப்படி நிகளத்தை அளப்பதற்குச் சர்க்காரில் ஒரு அளவு ஏற்படுத்தி யிருக்கிறார்களாம்; அதே அளவைத்தான் எல்லாரும் உபயோகிக்கவேண்டுமாம்; கச்சேரியில் உள்ளவர்கள் சர்க்கார் அளவுப்படி இந்த அளவு கோல்களை அளந்து முத்திரை போட்டுக் கொடுக்கிறார்களாம்.

18. இராமன் :—எனக்கு இதுவரையில் தெரியாது; இது வெகு நல்ல ஏற்பாடு; இல்லா விட்டால் ஏமாந்து போவோம்.

19. சுப்பன் :—நேரமாய் விட்டது. வா! பாட-

சாலைக்குப் போகலாம். இந்நேரம் உபாத்தியாயர் வந்து விட்டிருப்பார்.

24. ஒரு விளையாட்டு.

1. சாமி, கண்ணன், சங்கரன், இரங்கன், இலக்ஷ்மணன் என்னும் ஐந்து பிள்ளைகள் ஒரு இடத்தில் கூடினார்கள். அவர்களில் சாமி மற்றவர்களைப் பார்த்து "நாம் எல்லாரும் ராஜா மந்திரி ஆட்டம் ஆடலாம் வாருங்கள்" என்றான்.

2. எல்லாரும் ஒப்புக்கொண்டார்கள். சாமி கையில் சில கடிதத் துண்டுகள் வைத்திருந்தான். ஒவ்வொரு துண்டிலும் ஒவ்வொரு பெயர் எழுதி யிருந்தது. முதலில் சாமி அந்தத் துண்டு

களை மடித்துக் குலுக்கிக் கீழே போட்டான். ஆளுக்கு ஒவ்வொரு துண்டு எடுத்துக்கொண்டார்கள்.

3. சங்கரன் :—நான்தான் ராஜா; மந்திரி எங்கே?

4. கண்ணன் :—மகாராஜா! நான் மந்திரி; வந்தனம் செய்கிறேன்; இந்தப் பட்டணத்தில் நேற்றுக் கோவிந்தசெட்டியார் வீட்டில் களவுபோனதாகத் தெரியவருகிறது. யாரடா சேவகன்?

5. சாமி :—இதோ சேவகன்? ஹாஜர்.

6. கண்ணன் :—சீக்கிரம் திருடனைக் கண்டுபிடித்து வா.

7. சாமி:—இதோ கொண்டு வந்து விட்டேன் ஐயா. இலக்ஷ்மணா! நீதான் திருடியிருக்கவேண்டும். அது உன் முகத்தினாலேயே தெரிகிறது. எதோ உன் சீட்டைக் காட்டு. (பார்க்கிறான்.) கண்டுபிடித்து விட்டேன். இலக்ஷ்மணன்தான் திருடன்.

8. சங்கரன் :—இலக்ஷ்மணா! நீ செட்டியார் வீட்டில் கன்னம் வைத்தாயா?

9. இலக்ஷ்மணன் :—மகாராஜா! தெரியாமல் செய்து விட்டேன்; இந்தத் தடவை மாத்திரம் மன்னித்து விடுங்கள்; இனித் திருட்டுவேலைக்கு நான் போகவே மாட்டேன்.

10. சங்கரன்:—மந்திரீ! இவன் குற்றத்தை ஒப்புக்கொள்ளுகிறான். என்ன தண்டனை விதிக்கலாம்?

11. கண்ணன்:—மகாப்பிரபு! சவுக்கினால் ஆறு அடி அடித்தால் போதும்.

12. சங்கரன்:—சரி, அப்படியானால் டாக்டரை வரவழையும்.

13. கண்ணன்:—சேவகா! டாக்டரை அழைத்துவா.

14. சாமி:—பிரபு! இதோ டாக்டர் வந்தார்.

இரங்கன்:—வந்தனம் மகாராஜா! என்ன கட்டளை?

15. சங்கரன்:—இவன் ஆறு அடி தாங்குவானா பார்த்துச் சொல்லும்.

(கையைப் பார்க்கிறான்.

16. இரங்கன்:—மகாராஜா இவன் மிகவும் இளைத்திருக்கிறான். நான்கு அடிக்குமேல் தாங்க மாட்டான்.

17. சங்கரன்:—இலக்ஷ்மணா! நீ செய்த குற்றத்துக்கு நான்கு சவுக்கடி விதித்திருக்கிறேன். இனி இப்படிச் செய்யாதே. சேவகா! டாக்டர் சொல்லுகிறபடி இவனைச் சவுக்கால் நான்கு அடி அடி.

18. இரங்கன்:—சேவகா! முதலில் திருடனை இந்தக் கம்பத்தில் கட்டு. (சேவகன் கட்டுகிறான்.

19. இரங்கன் :—சவுக்கால் மெள்ள முதுகில் அடி. ஒவ்வொரு அடிக்கும் முதுகில் தண்ணீர் தெளி. மொத்தம் நான்கு அடிதான் அடிக்க-வேண்டும். தெரியுமா?

20. சாமி :—அப்படியே ஐயா !

(அடிப்பதாய்ப் பாவனை செய்கிறான்; திருடனும் அழுவதாய்ப் பாசாங்கு செய்கிறான்.)

21. ஆட்டமும் முடிந்துவிட்டது. பிள்ளைகள் யாவரும் வீட்டுக்குச் சென்றுவிட்டார்கள்.



25. மீன்குட்டி.

1. ஒரு நாள் ஒரு மீன்குட்டி தண்ணீரில் அழ-

காய் நீந்திக்கொண்டிருந்தது. அப்போது நீரில் ஒரு புழு அசையாமல் கிடந்தது. அதைக் கண்ட மீன் குட்டி வெகு சந்தோஷமாய்த் தாயினிடம் ஓடி "அம்மா அதோ பார்! ஒரு கொழுத்த புழு இருக்கிறது. அது கொஞ்சம் கூட அசையாமல் ஒரே யிடத்தில் இருக்கிறது. வா! இருவரும் பசிதீரச் சாப்பிடலாம்" என்று அழைத்தது.

2. அதற்குத் தாய் "குழந்தாய்! நல்ல காரியம் செய்தாய்; என்னிடம் வந்து சொன்னாயே; இன்று நல்லகாலம் தான்; பிழைத்தாய்! அதைச் சாதாரணமான புழு என்று எண்ணாதே! அது நம்மைக் கொல்ல வந்திருக்கும் யமன் புழு. சாதாரணமானதானால் அசையாமல் இருக்குமா? அதை மனிதர்கள் தூண்டிலில் மாட்டி நீரில் தொங்கவிட்டு இருக்கிறார்கள். அதன் கிட்டப்போய்த் தின்பதற்கு வாயை வைத்தாயோ உடனே செத்தாய்; இனி இதைப் போன்ற உணவுகளைப் பார்த்து ஏமாறாதே" என்றது. ஆனாலும் மீன் குட்டிக்குப் புழுவின்மேல் இருந்த ஆசை மாறவில்லை. தாய் வெளியே போன பிறகு கொஞ்சநேரம் பொறுத்துப் புழுவைத் தின்னச்சென்றது. புழு அப்பொழுதும் அசையவேயில்லை. மீன்குட்டி மிகவும் சந்தோஷத்துடன் அதை நிதானமாய் விழுங்கத் தொடங்கிற்று. உடனே அதன் தொண்டையில் ஒரு பெ-

ரிய முள் மாட்டிக்கொண்டு விட்டது. கரையில் இதற்காகக் காத்துக் கொண்டிருந்த பையன் தூண்டிலைச்சிவுக்கென்று மேலே தூக்கிக் கரையில் போட்டான். மீன்குட்டி 'தாயின் பேச்சைக் கேளாமல் கெட்டோமே' என்று விசனத்துடன் மாண்டது.

"தாய்ச்சொல் துறந்தால் வாசகம் இல்லை."



26. ஆமணக்கு.

1. படத்தில் இருப்பது ஆமணக்குச் செடி.

இது பேரா மணக்கு சிற்றுமணக்கு என்று இரண்டு வகைப்படும். பேராமணக்குத் தண்டு, மூங்கில்போல் குழலாகவும் கணுக்கள் உள்ளதாகவும் இருக்கும். இதன் இலை சிற்றுமணக்கு இலைகளைவிடப் பெரியது. இதன் தண்டு, இலைக்காம்பு, காய் இவைகளின் மேல் சாம்பலைப்போன்ற ஒருவித துகள் படிந்திருக்கும். தொட்டால் கையிலும் ஒட்டிக்கொள்ளும்.

2. சிற்றுமணக்கு, இது ஒரு சிறிய மரத்தைப் போலக் கப்பும் கிளையுமாய் வளரும். இரண்டுவகை ஆமணக்குகளும் குலைகுலையாய்க் காய்க்கும். காய்கள் உருண்டு அவைகளின்மேல் மிருதுவான நீண்ட முட்கள் அடர்ந்திருக்கும். காய் முற்றினால் உலர்ந்து வெடித்து உள்ளிருக்கும் முத்து வெளிப்படும். ஒரு குலையில் ஒன்று அல்லது இரண்டு காய்கள் உலர்ந்து வெடித்திருந்தால் அந்தக் குலை ஒடித்துவிடுவதற்குப் பக்குவமாய் விட்டது என்று தெரிந்துகொள்ளலாம்.

3. பேராமணக்கைவிடச் சிற்றுமணக்குச் செடி அதிககாலம் ஜீவித்திருக்கும். பேராமணகு ஒரு வருஷத்துக்குமேல் இராது. பேராமணக்கு முத்து அளவில் பெரியது. அதனால்தான் அதற்கு அந்தப் பெயர் வந்தது.

4. முத்துக் கொட்டைகளை உலர்த்தி வறுத்து உரலில் இடித்துப் பானையில் போட்டு வேண்-

டிய அளவு தண்ணீர் கலந்து காய்ச்சுவார்கள். காயக்காய எண்ணெய் பிரிந்து தண்ணீரின் மேல் மிதக்கும். அதை அகப்பையால் எடுத்து வேறு பாத்திரத்தில் சேர்ப்பார்கள். அப்பொழுது சுத்தமான எண்ணெய் ஆகமாட்டாது. எடுத்த எண்ணையை மறுபடியும் காய்ச்சிச் சுத்தப் படுத்த வேண்டும். இதுதான் எண்ணெய் எடுக்கும் முறை. இந்த எண்ணெய்க்கு விளக்கெண்ணை என்று பெயர். இவற்றில் சிற்றாமணக்கெண்ணை குழந்தைகளை வளர்த்து உடம்புக்குச் சுகத்தை உண்டாக்குவதில் பெயர் போனது. இந்த எண்ணை விளக்கு எரிப்பதற்கும் உபயோகப்படுகிறது.



27 தேனீயும் குளவியும்.

1. ஒருநாள் ஒரு தேனீ ஒரு குளவியைச் சந்-

த்தது. குளவி மிக விநயத்துடன் தேனீக்கு வந்தனம் சொல்லி "நண்பனே! நாம் இருவ-ரும் ஒரே மாதிரி தானே இருக்கிறோம். எனக்-காவது தங்கம்போன்ற இறகுகள் இருக்கின்-றன. உனக்கோ அதுவும் இல்லை. நம் இருவ-ருக்கும் தேனில்தான் விருப்பம். இருவரும் பறக்கிறோம். கோபம் வந்தால் மனிதரைக் கொ-ட்டுகிறோம். இப்படியிருக்க, மனிதர் உன்மேல் மாத்திரம் பக்ஷமா யிருக்கிறார்கள். உனக்குக் கூடு கட்டிக் கொடுத்து ஆகாரம் கிடைக்காத மழைகாலத்தில் உணவளித்துக் காப்பாற்றுகி-றார்கள். மனிதர்கள் எனக்குச் செய்யும் துன்-பத்துக்கு அளவில்லை. இதற்குக் காரணம் என்ன" என்று கேட்டது.

2. அதற்குத் தேனீ "குளவியே! உன்னால் மனிதருக்கு என்ன நன்மை உண்டு; அவர்களுக்-குத் தொந்தரவு மாத்திரம் செய்கிறாய்; நானோ அவர்களுக்காகத் தினந்தோறும் பூக்கள் பூக்-களாய்த் திரிந்து தேன் சேர்த்து வைக்கிறேன்; அதனால்தான் மனிதருக்கு என் மேல் விருப்பும் உன் மேல் வெறுப்பும் உண்டாகின்றது; நீயும் என்னைப்போல் ஏதாவது ஒரு விஷயத்தில் உதவி புரியப் பிரயத்தனப்படு; உன்னையும் விரும்புவார்கள்" என்றது.

"உபகாரிகளை விரும்பாதவர்கள் யார்?"

28 புத்திசாலியான ஒட்டன்.

1. ஒரு ஒட்டன் ஒரு குடியானவன் நிலத்தில் கூலிக்குக் கிணறு வெட்டுவதாக ஒப்புக்கொண்டான். அவன் பகலும் இரவும் ஓயாமல் வேலை செய்து நான்கு அடி ஆழம் தோண்டினான்.

2. மறு நாள் காலையில் கிணற்றண்டை வந்து பார்க்கையில் கரை முழுவதும் இடிந்து கிணற்றுக்குள் விழுந்து கிடந்தது. ஒட்டன் மனம் வருந்தி 'இது ஒரு கெட்ட தொழில்' என்று தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டு கரையில் உட்கார்ந்து கொஞ்சநேரம் யோசித்துத் தன்

மேல் துணியையும் கடப்பாறையையும் கிணற்றண்டையிலேயே வைத்துவிட்டு வீட்டுக்குப் போய்ப் படுத்துக்கொண்டான்.

3. கொஞ்சநேரத்துக்கெல்லாம் குடியானவன் அங்கு வந்து துணியும் கடப்பாறையும் கரையில் வைக்கப்பட்டிருப்பதையும், கிணறு இடிந்து விழுந்து கிடப்பதையும் பார்த்து ஒட்டன் அநியாயமாய்க் கிணற்றுக்குள் மண்ணில் புதைந்துபோயிருக்கவேண்டும்' என்று நினைத்து விசனப்பட்டான். பின்பு பக்கத்திலிருந்தவர்களைக் கூவி 'விழுந்த மண்ணைத் தோண்டியெடுத்து அந்த ஏழை ஒட்டனைக் காப்பாற்ற வாருங்கள்' என்று வேண்டினான்.

4. அவர்கள் அப்படியே மண் முழுமையும் தோண்டி எடுத்தார்கள். இப்படி யிருக்கையில் எல்லாரும் ஆச்சரியப்படும்படி ஒட்டன் வீட்டிலிருந்து கிணற்றுப் பக்கமாய் வந்தான். வந்தவன் அவர்களைப் பார்த்து என்ன சொன்னான் தெரியுமா? "ஐயா! என் மேல் தயவு செய்து இடிந்து விழுந்த மண்ணைத் தோண்டி யெடுத்ததற்காக உங்கள் எல்லாருக்கும் வந்தனம் செய்கிறேன். நான் காலையில் வந்து பார்க்கையில் கரை இடிந்து உள்ளே விழுந்து கிடந்தது. எனக்குத் தலை வலியா யிருந்தபடியால் வீட்டுக்குப் போய்ப் படுத்துக்கொண்டுவிட்டேன். இப்-

போதுதான் கொஞ்சம் குணப்பட்டது. திரு-ம்பி வந்தேன்" என்றான்.

5. அதைக் கேட்டதும் அவர்கள் யாவரும் அவன் சாமர்த்தியத்துக்காகச் சந்தோஷப்-பட்டார்கள்.



29. தண்ணீர்.

1. அதோ தெருவில் ஒரு கிணறு இருக்கிறது. அது வெகு ஆழம். அதைச் சுற்றிலும் தரை-க்கு மேல் சுவர் கட்டி யிருக்கிறது. தோண்டி-யில் கயிற்றைக் கட்டிக் கிணற்றுக்குள் விட்டுத் தண்ணீர் எடுக்கிறார்கள். தண்ணீர் எதற்கு? அதனால் நம்முடைய உடம்பு அழுக்கைக் கழுவி ஸ்நானம் செய்கிறோம். தாகத்தைத் தணித்துக்கொள்கிறோம். சமையல் செய்வதற்கும்

பாத்திரங்களைக் கழுவுவதற்கும் அது உபயோ-கப்படுகிறது. மரம், செடி, புல், பூண்டு முதலிய-வைகள் வளருவதற்கும் தண்ணீர் முக்கிய ஆதாரம். தண்ணீர் இல்லாவிட்டால் எந்தப் பிராணியும் பிழைத்திருக்கமாட்டாது.

2. கிணறுகள் தவிர, ஏரி, ஆறு, குளம், குட்-டை முதலியவற்றிலிருந்தும் நமக்குத் தண்ணீர் கிடைக்கும். தண்ணீர் எங்கிருந்து வருகிறது தெரியுமா? மழை பெய்யும்போது மழைத் தண்-ணீர் ஏரிகளிலும் குளங்களிலும் பாய்ந்து ஆற்-றின் வழியாய்ப் புரண்டோடுகின்றது. அப்பொ-ழுது கொஞ்சம் தண்ணீர் பூமிக்குள் ஊறிப்போ-கிறது. அப்படி ஊறிப்போகும் தண்ணீர் நாம் பூமியில் கிணறு வெட்டும் போது அந்தப் பள்-ளத்திலிருந்து ஊற்ருய் வெளிப்பட்டு நமக்கு உதவுகிறது.

3. மழை பெய்கையில் ஆகாயத்திலிருந்து துளித்துளியாய்ப் பூமியில் தண்ணீர் விழுவ-தைப் பார்த்திருக்கிரும். துளித்துளியாய் விழு ம் தண்ணீர் ஒன்ருகச் சேர்ந்து பெருகி ஓடும். இதனல் தண்ணீர் பலதுளிகள் ஒன்ருய்ச் சேர்-ந்து ஒரே உருவாகக் கூடியது என்றும், பள்ளத்-தை நோக்கிப் பாய்ந்தோடக் கூடியது என்றும் அறிகிருேம். கொஞ்சம் தண்ணீரைக் கையில் எ டுத்துத் தெளித்தால் அது பலதுளிகளாகப் பிரி-ந்து விழும். பல துளிகள் ஒன்ருய்க் கூடின

தண்ணீர் மறுபடி துளிகளாகவும் பிரியக் கூடி-யது என்று இதனால் தெரிகிறதல்லவா?

4. தண்ணீரைப் போலவே எண்ணெய், பால் முதலிய பொருள்களும் பல துளிகளாகப் பிரிந்-து மறுபடி முன்போலவே கூடும். இவ்வகையான பொருள்களுக்குத் திரவப் பொருள்கள் என்று பெயர். திரவப் பொருள்களை ஓட்டையில்லாத பாத்திரங்களில் வைக்கவேண்டும்.

30. ஒரு துணிவுள்ள சிறுவன்.

1. மணியன் என்னும் பையன் மிகவும் துணி-

171.489

வுள்ளவன். அவன் மரம் ஏறுவதில் கெட்டிக்காரன். ஒரு நாள் அவன் ஒரு பெரிய மாந்தோப்புக்குப் போனான். அங்கு ஒரு மாமரத்தில் பழங்கள் பழுத்திருந்தன. அவற்றைக் கண்ட மணியனுக்குவாயில் ஜலம் ஊறிற்று. உடனே மரத்தின் மேல் ஏறித் தனக்குவேண்டியவரையில் பழங்களைப் பறித்து அங்கேயே தின்றான். மரத்தின் பொந்தில் ஒரு கிளி கூடு கட்டியிருந்தது. அதில் 'கிளிக்குஞ்சு இருக்கும்' என்று நினைத்துப் பொந்தில் கையை விட்டான். என்ன நடந்தது தெரியுமா? அதில் வந்து பதுங்கிக்கொண்டிருந்த நல்லபாம்பு அவன் கையில் கடித்துவிட்டது.

2. உடனே மணியன் என்ன செய்தான்? தன் மடியில் இருந்த கத்தியை எடுத்துக் கடித்த இடத்தைக் கீண்டு இரத்தத்தை நன்றாய் வடியும்படி செய்தான். பின்பு தன் துணியில் ஒரு ஓரத்தை நீளமாய்க் கிழித்துக் கடிவாய்க்கு மேலே கெட்டியாய்க் கட்டினான். அவன் அப்படிச் செய்யாதிருந்தால் பாம்பின்விஷம் ரத்தத்தில் கலந்து உடம்பு முழுவதும் பரவித்தலைக்கு ஏறிவிடும். உடனே செத்துப்போயிருப்பான். இந்த சங்கதியை அவன் உபாத்தியாயர் ஒரு சமயத்தில் சொல்லியிருந்தார். இவன் அப்படியே செய்ததனால் பிழைத்தான். பிறகு ஆஸ்பத்தி

ரிக்குப்போய்க் காயத்தை ஆற்றிக்கொண்டான். மணியனுடைய தைரியத்தையும் ஞாபக சக்தியையும் பார்த்தீர்களா?

31. புத்திமதி.

பாட்டு.

1. புத்திகேளுங்கள். நல்ல புத்திகேளுங்கள்.
பொறுமையுடன் சிறுவர்களே
தருணமிது அருமையான (புத்தி)
2 விடியற்காலையில், எழுந்து, விடுங்கள் நா
பொடியெடுத்து விரல்பிடித்துப் [ளுமே.
புகுந்து பல்லை விளக்கிக் கடவுள்
3. போற்றிப் பணியுங்கள். மலர் தூற்றித் தெ
[ளியுங்கள்.
புதியபாடம் பழயபாடம்
பொருளறிந்து கவனமாகப்
4. படித்துக்கொள்ளுங்கள். உடைகள் உடுத்
[துக்கொள்ளுங்கள்.
பலகை முதல் பலவும் கவனப்
படுத்தியெடுத்துப் புசித்து விரைவில்
5. பாடசாலைபோய்க், குருவைப் பணிந்து
[நில்லுங்கள்.
பகல் முழுதும் அவர் மொழியும்
பாடம் மனத்தில் நாடித்தெரிந்து
6. பக்ஷம் கொள்ளுங்கள்; அவர்மேல் இஷ்
[டம் கொள்ளுங்கள்.

பலதினமும் பெரியவர்கள்
மலரடிகள் தலைகொள்ளுங்கள்.
பாலகர்களே. எனது பாலகர்களே.



32. தேனீ.

1. புஷ்பங்கள் மிகவும் அழகானவை. வாசனையாகவும் பலவித வர்ணமுள்ளவைகளாகவும் இருக்கும். சில வெள்ளை ; சில சிவப்பு ; சில மஞ்சள் ; சில ஊதா ; சில கருமை ; இன்னும் சில ரோஜா நிறம்.

2. ஒரு நாள் ஒரு தேனீ தாமரைப் புஷ்பத்தில் உட்கார்ந்து அதிகமாகத் தேனைக் குடித்து அந்தப் பூவிலேயே படுத்துத் தூங்கிவிட்டது. அந்தச்சமயத்தில் தாமரை இதழ்கள் எல்லாம் மூடிக்

கொண்டு விட்டன. தேனீக்கு ஒன்றும் தெரி-யாது.

3. கொஞ்சநேரம் ஆனபிறகு ஈ விழித்துக்-கொண்டு "ஐயோ! ஏன் இங்குத் தூங்கினோம்? இதைவிட்டு எப்படி வெளியே போவோம்" என்று அழுது புலம்பிற்று. அதனுடைய குஞ்சுகள் தாயைக் காணாமல், ரீம்! ரீம்! ரீம்! என்று அழுதுகொண்டே இரவு முழுவதும் கழித்தன.

4. பொழுது விடிந்தது. தேனீ 'செத்தேன் பிழைத்தேன்' என்று உடனே தன் கூண்டுக்கு ஓடிப்போய்க் குஞ்சுகளைக் கட்டி முத்தமிட்டுக் கொண்டது.

"மீதூண் விரும்பேல்"

33. இராமன்.

பாட்டு.

1. இந்தச் சிறுவன் இராமன் ஒரு நாள்
இரவில் வந்தனன்;
விந்தையான விளையாட்டொன்றை
விரும்பி நின்றனன்;

2. பாலைப் போலப் பரிசுத்தமாய்ப்
பருவம் தன்னிலே;
மாலைப்போது மறைந்த பின்பு
வந்தான் சந்திரன்;

3. வட்டமாக வானில் வந்த
வரிசை கண்டிவன்;
சட்டமாகத் தான் பிடிக்கத்
தாவி நின்றனன் ;

4. குதித்துக் குதித்துக் குவித்துக் கையைக்
கூவி யழைத்தனன்;
உதித்த சந்திரன் ஓடி வானில்
உயர்ந்திருந்தனன் ;

5. அழுது வேண்டும் அழகு சந்திரன்
அம்மா! தா வென்றான்;
தொழும் கடவுள் தோத்திரம் செய்
துரையே ! போ வென்றாள்;

6. விளையாட்டுக்கு வேண்டும் பொம்மைகள்
விரும்பிக் கொடுத்தனள் ;
இளையவனும் எடுத்தவற்றை
எறிந்து விடுத்தனன்;

7. தந்தை வந்து சங்கதியைத்
தான் தெரிந்தனர்;
அந்த வேளை அவனழுகை
அகற்ற வறிந்தனர்;

8. முகக் கண்ணாடி முந்தி யொன்று
முன்னே நாட்டினர்;

நகைத்துச் சந்திரன் நாடி யதற்கு
நடுவில் காட்டினார்;

9. கண்ணாடிக்குள் கண்டு நிலவைக்
களிப்பில் விஞ்சினான்;
அண்ணா! சந்திரன் அகப்பட்டானென்
றாடிக் கொஞ்சினான்.

34. உழவு.

1. இதோ ஒருவன் ஏர் உழுகிறான். ஏர் உழுவதற்கு என்னென்ன வேண்டும்? கவனித்துச் சொல்! கலப்பை, கார், நுகத்தடி, தாற்றுக்கோல், உழவுகயிறு, பூட்டாங்கயிறு, மாடுகள் இவை வேண்டும். நுகத்தடியை மாடுகளின்

கழுத்தில் வைத்துப் பூட்டாங் கயிறுகளால் பூட்டியிருக்கிறது. பின்பு நுகத்தடியில் உழவு கயிற்றைக் கோத்து ஏர்க்கால் மேழி இவற்றோடு சேர்த்துக் கட்டியிருக்கிருன். கலப்பையில் தரையில் பட்டுக்கொண்டிருக்கின்ற பாகத்துக்குப் படை என்று பெயர். படை நுனியில் இரும்பால் செய்த கூரான கார் சொருகியிருக்கும். அஃது இல்லாவிட்டால் படையின் கூர் உழும்போது ஒடிந்து போம்.

2. இவன் பின்னுல் நின்று மேழியை இடக்கையால் அழுத்திப் பிடிக்கிருன். வலக்கையிலிருக்கும் தாற்றுக்கோலால் மாடுகளை ஒட்டுகிருன். படையின் முனை பூமிக்குள் புதைகின்றது. மாடுகள் கலப்பையை இழுத்துக்கொண்டு போவதால் மண் பெயர்ந்து தரை புழுதியாகின்றது.

3. இப்படி ஏன் உழவேண்டும்? சொல்லுகிறேன்; கேளுங்கள். உழுவதால் கெட்டியாயிருந்த மண் பெயர்ந்து தூளாகின்றது. அதனுல் பயிரின் வேர்கள் பூமிக்குள் சுலபமாய் இறங்கிச் செழித்து வளருகின்றன.

4. தரை ஈரமா யிருக்கும்போதுதான் உழவேண்டும். காய்ந்து விட்டால் உழ முடியாது. நிலத்தில் தண்ணீர் கட்டி உழுதால் சேருகும். சேற்றுநிலங்களில் நெல் விளையும். புழுதிக்கால் நிலங்களில் நெல், கேழ்வரகு, கொள்ளு,

எள்ளு, துவரை, கம்பு, வரகு முதலிய தானியங்கள் உற்பத்தியாகும்.



35. அடக்கம்.

1. ஒரு காலத்தில் மழைபெய்ய வில்லை. ஏரி குளங்கள் எல்லாம் வரண்டு விட்டன. தானியங்கள் விளையவே யில்லை. அநேக ஜனங்கள் சாப்பாடில்லாமல் கஷ்டப்பட்டார்கள். அப்படிப்பட்ட பஞ்சகாலத்தில் பம்பாய்ப் பட்டணத்தில் ஒரு பெரிய பிரபு இருந்தார். சிறுவர்கள் எல்லாரும் அவரிடத்துக்குச் சென்று 'சாப்பாடு போடுங்கள்' என்று கேட்டார்கள். அவர் "குழந்தைகளே! நீங்கள் நாள்தோறும் காலையில்

இங்கே வாருங்கள்; எல்லாருக்கும் ஒவ்வொரு ரொட்டி தருகிறேன்" என்று சொன்னார்.

2. அப்படியே மறுநாள் காலையில் சிறுவர்களுக்காக அவர் வேலைக்காரன் ஒருவன் கூடையில் ரொட்டிகளைக் கொண்டுவந்து வெளியில் வைத்தான். உடனே சிறுவர்கள் "நான் முன்னே நான் முன்னே" என்று ஒருவர்மேல் ஒருவர் விழுந்துகொண்டு தலைக்கு ஒவ்வொன்றாக எடுத்துக் கொண்டு விட்டார்கள். அப்பொழுது ஒரு பெண் மாத்திரம் மிகவும் அடக்கத்துடன் தூரத்தில் இருந்தாள். எல்லாரும் எடுத்தான பிறகு அந்தக் கூடையில் ஒரு சிறிய ரொட்டித்துண்டுதான் மிகுந்திருந்தது. கடைசியில் அவள் அதை எடுத்துக்கொண்டாள்.

3. மறுநாளும் மறுநாளும் காலையில் அப்படியே நடந்தது. நான்காவது நாளிலும் அந்தப் பெண் தூரவிருந்து கடைசியில் மிகுந்திருந்த ரொட்டித்துண்டை எடுத்துக்கொண்டு போய்த் தன் தாயாரிடம் கொடுத்தாள். அவள் அதைப் பிட்டுப்பார்க்க அதிலிருந்து இரண்டு பொன் நாணயங்கள் கீழேவிழுந்தன. உடனே தாய் "குழந்தாய்! இது பிசகு; அந்தப்பிரபு உனக்கு ரொட்டித்துண்டு கொடுத்தாரேயல்லாமல் பொன் நாணயங்கள் கொடுக்கவில்லை; நமக்குச் சொந்தமானது ரொட்டித்துண்டுதான்; பொன் நாணயங்களைச் சொந்தக்காரரிடம்

கொடுத்து விட்டுவா" என்று அனுப்பினாள்.

4. ஆனால், பிரபு அவற்றைப் பெற்றுக்கொள்ளவில்லை. அவர் 'என் அன்புள்ள குழந்தையே! நான்தான் ரொட்டித்துண்டில் பொன் நாணயங்களை வைக்கச் சொன்னேன். இது உன் அடக்கத்துக்காகக் கொடுத்த வெகுமதி" என்று வீட்டுக்கு அனுப்பினார்.

" அடக்கம் அருங்கலம்"

35. உலகநீதி.

செய்யுள்.

1. ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்.
2. ஒருவரையும் பொல்லாங்குச் சொல்ல வேண்டாம்.
3. மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்.
4. வஞ்சனைகள் செய்வாரோடு இணங்க வேண்டாம்.
5. போகவிட்டுப் புறஞ்சொல்லித் திரிய வேண்டாம்.
6. அடுத்தவரை ஒரு நாளும் கெடுக்கவேண்டாம்.
7. மனம்போன போக்கெல்லாம் போகவேண்டாம்.
8. தனம்தேடி உண்ணுமல் புதைக்கவேண்டாம்.
9. தருமத்தை ஒருநாளும் மறக்கவேண்டாம்.
10. கொலை களவு செய்வாரோடு இணங்கவேண்டாம்.
11. கற்றவரை ஒருநாளும் பழிக்கவேண்டாம்.
12. வார்த்தைசொல்வார் வாய்பார்த்துத் திரியவேண்டாம்.
13. மூத்தோர் சொல் வார்த்தைதனை மறக்க வேண்டாம்.

14. முன்கோபக்காரரோடு இணங்கவேண்டாம்.

15. வழி பறித்துத் திரிவாரோடு இணங்கவேண்டாம்.

16. சேராத விடந்தனிலே சேரவேண்டாம்.

17. செய்தநன்றி ஒரு நாளும் மறக்கவேண்டாம்.

18. புறஞ்சொல்லித் திரிவாரோடு இணங்கவேண்டாம்.

19. இறந்தாலும் பொய்தன்னைச் சொல்லவேண்டாம்.

20. தெய்வத்தை ஒருநாளும் மறக்க வேண்டாம்.

முற்றிற்று.

171489
சென்னை-600 008.

S. MURTHY AND CO., MADRAS.

விலைக்குத் தயாராக இருக்கும் தமிழ் புத்தகங்கள்.

திரிச்சிராப்பள்ளி ஸெயிண்டு ஜோஸப் காலேஜ் தமிழ் பண்டிதர் வா. பி. வேங்கடராம சாஸ்திரி யாரால் இயற்றப்பட்டவை.

* துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்டவை.

புதிய முதல் தமிழ் வாசகம்	0	2	0
இரண்டாவது புதிய தமிழ் வாசகம் ...	0	2	6
மூன்றாவது ,, ,, ...	0	3	0
* அனுபவமுறைப் பாலபோத கணிதம் முதல் புத்தகம்	0	6	0
அனுபவமுறைப் பாலபோத கணிதம் இரண்டாம் புத்தகம்	0	2	6
* பூகோள பீடிகை	0	2	6
* கிராம ஆளுகை முறையும் குடிகளின் கடமைகளும்	0	3	0
புதிய தமிழ் பாலபாடம்	0	1	6
புதிய வட ஆற்காடு ஜில்லா பூகோளம் ...	0	2	0
'ஸத்யவிஜயம்' ஒரு நேர்த்தியான நாடகம் ...	0	10	0
ஸெபன்னிஸா do. அச்சிலிருக்கிறது.			
இந்திய பெண் மணிகள் சரித்திரம். do.			
திருக்குறள் விளக்கம்	0	10	0

இன்னும் இதர எல்லா தமிழ் புத்தகங்களும் திருமலை அண்டு கம்பெனியாரிடத்தில் விலை சரசமாய்க் கிடைக்கும்.

Apply to:—

ஆர். திருமலை அண்டு கம்பெனி,
114, பவழக்காரத் தெரு, சென்னை.

S. Murthy., & Co. Madras.